முதலாளிகளுக்கான ஒரு வழிகாட்டி

# வேலையிடக் காய இழப்பீடு



MINISTRY OF MANPOWER

வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டம் (WICA) என்பது என்ன?

வேலையிடக் காய இழப்பீட்டுக் காப்புறுதி

சம்பவ அறிக்கை

வேலையிடக் காய இழப்பீட்டுக் கோரல் செயல்முறை

# முன்னுரை

வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தின் ஒரு சுருக்கமான கண்ணோட்டத்தை இந்த வழிகாட்டி வழங்குகிறது.

இந்த வழிகாட்டியில் உள்ளடங்கியுள்ள தகவல்களானது, தகவல்களுக்காக மட்டுமேயாகும். இவை சட்ட ஆலோசனையை உள்ளடக்கவில்லை. ஏதேனும் சந்தேகங்களுக்கு, வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தைப் பார்க்க வேண்டும்.



1 வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டம் (WICA) குறித்த ஒரு கண்ணோட்டம்

1 வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டம் என்பது என்ன
3 வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டம் குறித்த ஒரு மேலோட்டமான பார்வை
4 யாரெல்லாம் வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படுகிறார்கள்

5 வேலையிடக் காய இழப்பீட்டுக் (WIC) காப்புறுதி

7 யாரெல்லாம் வேலையிடக் காய இழப்பீட்டுக் காப்புறுதியை வாங்க வேண்டியுள்ளது
7 மனிதவள அமைச்சுக்கு வேலையிடக் காய இழப்பீட்டுக் காப்புறுதியின் விவரங்களை வழங்குதல்
8 வேலையிடக் காய இழப்பீட்டுக் காப்புறுதி குறித்துக் கவனத்தில்கொள்ள வேண்டிய விஷயங்கள்

9 சம்பவ அறிக்கை

11 எதை மற்றும் எப்போது தெரிவிக்க வேண்டும்
12 எவ்வாறு தெரிவிக்க வேண்டும்


13 வேலையிடக் காய இழப்பீட்டைக் கோருவதற்கான செயல்முறை

15 கடப்பாட்டை மதிப்பிடுதல்
16 வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் விபத்துக்கு இழப்பீடு பெற இயலுமா என்பதை எவ்வாறு தீர்மானிப்பது
18 வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் எந்த வகையான இழப்பீட்டைக் கோர முடியும்
20 நிரந்தரத் திறனிழப்பு மற்றும் மரணத்திற்காக இழப்பீடு கோருவதற்கான வழிமுறைகள்

25 பின்னிணைப்புகள்

27 பின்னிணைப்பு A: இழப்பீடு பெற முடிகின்ற தொழில்வழி நோய்களின் பட்டியல்
30 பின்னிணைப்பு B: வயது பெருக்கல் விகிதத்தின் அட்டவணை
31 பின்னிணைப்பு C: இழப்பீட்டுத் தொகையைக் கணக்கிடுவது தொடர்பான விளக்கப்படம்
33 பின்னிணைப்பு D: சம்பவம் குறித்து முதலாளி தகவல் தெரிவிக்க வேண்டுமா
34 பின்னிணைப்பு E: குற்றங்கள் மற்றும் அபராதங்களின் பட்டியல்
35 பின்னிணைப்பு F: வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் முதலாளியின் கடப்பாடுகளுக்கான சரிபார்ப்புப் பட்டியல்

# வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டம் (WICA) குறித்த ஒரு கண்ணோட்டம்



## வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டம் என்பது என்ன

வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தின் (WICA) கீழ், ஒரு பணியாளர் பணியின் காரணமாக ஏற்படும் விபத்தின் மூலம் காயமடைகிறார் அல்லது உடல்நலம் பாதிக்கப்படுகிறார் எனில், அவர் தனது முதலாளியிடமிருந்து இழப்பீட்டைக் கோர முடியும்.

அப்பணியாளர் உங்களுக்காகத் தற்சமயம் பணியாற்றிக் கொண்டிருக்கவில்லை என்றாலும் கூட, ஒரு முதலாளியாக அவருக்கு இழப்பீடு அளிக்க வேண்டியது உங்கள் கடமையாகும். யார் தவறு செய்தார் என்பது ஒரு பொருட்டல்ல.



## வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டம் குறித்த ஒரு மேலோட்டமான பார்வை

### யாரெல்லாம் பாதுகாக்கப் படுகின்றனர்?



எல்லா பணியாளர்களும், சில விலக்களிப்புகளுடன்

### எனது கடமை என்ன?




- பணி தொடர்பான விபத்துகளை மனிதவள அமைச்சிடம் (MOM) தகவல் தெரிவியுங்கள்.
- பணி தொடர்பான காயங்களுக்காக உங்கள் பணியாளருக்கான உங்கள் கடப்பாட்டைக் காப்புறுதி செய்துகொள்ளுங்கள்.

### எனது பணியாளர் எதை இழப்பீடாகக் கோர முடியும்?




- மருத்துவ விடுப்பு ஊதியங்கள்
- மருத்துவச் செலவுகள்
- நிரந்தரத் திறனிழப்பு அல்லது மரணத்திற்கான ஒரே தவணையில் வழங்கப்படும் பணமளிப்புகள்

### எனது பணியாளர் எவ்வளவு தொகையை இழப்பீடாகக் கோர முடியும்?





தொகைகள் வரம்புகளுக்கு உட்பட்டவையாகும்



## யாரெல்லாம் வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படுகிறார்கள்

### பாதுகாக்கப்படுகிறார்கள்

- ஊதிய அளவு ஒரு பொருட்டாக இல்லாமல், ஒரு முதலாளியுடன் ”ஓர் ஒப்பந்தச் சேவை” அல்லது “தொழிற்பயிற்சி ஒப்பந்தத்தின்” கீழ் ஈடுபடுகின்ற எல்லா பணியாளர்களும்.



### பாதுகாக்கப்படவில்லை

- சிங்கப்பூர் ஆயுதப் படையின் ஏதேனும் உறுப்பினர்
- சிங்கப்பூர்க் காவல் துறை, சிங்கப்பூர்க் குடிமைத் தற்காப்புப் படை, மத்திய போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் சிங்கப்பூர் சிறைச் சேவையின் சீருடை அணிந்த அதிகாரி
- சுயதொழில் புரிபவர் அல்லது தனித்தியங்கும் ஒப்பந்ததாரர்
- பணிப்பெண்

**“ஒப்பந்தச் சேவை” என்பது எழுத்துப்பூர்வமான அல்லது வாய்மொழியான ஏதேனும் ஒப்பந்தமாகும். இதில் ஒருவர் முதலாளியாகவும், மற்றொருவர் பணியாளராகவும் இருப்பதற்கு ஒப்புக்கொள்கின்றனர்.**




# வேலையிடக் காய இழப்பீட்டுக் (WIC) காப்புறுதி

ஒரு முதலாளியாக, நீங்கள் மாதத்திற்கு $1,600 -க்கும் குறைவாக வருமானம் ஈட்டுகின்ற எல்லா உடலுழைப்புப் பணியாளர்களுக்கும் உடலுழைப்பு-அல்லாத பணியாளர்களுக்கும் வேலையிடக் காய இழப்பீட்டுக் (WIC) காப்புறுதியை வாங்க வேண்டியது சட்டப்படி அவசியமாகும்.

மேலும், நீங்கள் மற்ற பணியாளர்கள் குழுவுக்காகவும் கூட வேலையிடக் காய இழப்பீட்டுக் காப்புறுதியை வாங்குமாறு ஊக்குவிக்கப்படுகிறீர்கள். இத்தகைய பணியாளர்களின் பணி தொடர்பான காயங்களுக்கு இழப்பீடு அளிப்பதற்கும் கூட நீங்கள் கடமைப்பட்டுள்ளீர்கள்.

இழப்பீடுகளுக்காக அளிக்க வேண்டிய தொகையின் காரணமாக உங்களுக்கு ஏற்படக்கூடிய நிதி சார்ந்த பாதிப்பைக் குறைப்பதற்கு, நீங்கள் போதுமான அளவிற்கு வேலையிடக் காய இழப்பீட்டுக் காப்புறுதி எடுத்திருப்பதை உறுதிசெய்துகொள்ள வேண்டும்.






## யாரெல்லாம் வேலையிடக் காய இழப்பீட்டுக் காப்புறுதியை வாங்க வேண்டியுள்ளது

ஒரு முதலாளி பின்வரும் பணிகளை மேற்கொள்கின்ற தனது உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பணியாளர்கள் இருவருக்காகவும் போதுமான வேலையிடக் காய இழப்பீட்டுக் காப்புறுதியைப் பராமரிக்க வேண்டியது அவசியமாகும்:



**உடலுழைப்புப் பணி, ஊதிய அளவு ஒரு பொருட்டல்ல**




**உடலுழைப்பு-அல்லாத பணி, மற்றும் மாதத்திற்கு $1,600 அல்லது அதற்குக் குறைவாக ஊதியம் ஈட்டுபவர்கள்**

**உடலுழைப்பு-அல்லாத பணியை மேற்கொள்கின்ற மற்றும் மாதத்திற்கு $1,600 -க்கும் அதிகமாக ஊதியம் பெறும் பணியாளர்களுக்காக:**







- தனது பணியாளர் குழுவிற்காகக் காப்புறுதியை வாங்கலாமா வேண்டாமா என்பதை முடிவு செய்யும் உரிமை முதலாளிக்கு உள்ளது.




- எனினும், ஒரு செல்லத்தக்க இழப்பீட்டுக் கோரல் செய்யப்படும் வேளையில், அதற்கான இழப்பீட்டைக் காப்புறுதி எடுத்திருக்காத முதலாளி தனது கைக்காசில் அளிக்க வேண்டியிருக்கும்.

## மனிதவள அமைச்சுக்கு வேலையிடக் காய இழப்பீட்டுக் காப்புறுதியின் விவரங்களை வழங்குதல்

**வேலை அனுமதிச்சீட்டு & S அனுமதிச்சீட்டு வைத்திருக்கும் பணியாளர்களின் முதலாளிக்காக மட்டும்**




வேலை அனுமதிச்சீட்டு அல்லது S அனுமதிச்சீட்டு வழங்கப்படும் போது அல்லது புதுப்பித்துக்கொள்ளும் போது, பின்வரும் தகவல்களை அமைச்சிடம் வழங்கவும்:

- *காப்பீட்டாளரின் பெயர்*
- *காப்புறுதி எண்*
- *காப்புறுதி தொடங்கிய தேதி*
- *காப்புறுதி காலாவதியாகும் தேதி*

*காலாவதியான காப்புறுதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

## வேலையிடக் காய இழப்பீட்டுக் காப்புறுதியில் கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள்

1

**உங்களின் பணியாளர்கள் வேலையிடக் காய இழப்பீட்டுக் காப்புறுதியின் கீழ் பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டியது கட்டாயமாகும்.**

- காப்புறுதி ஆவணங்களில் வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பலன்கள் உள்ளடங்கியிருக்க வேண்டும்.
- மருத்துவ விடுப்பு ஊதியங்கள், மருத்துவச் செலவுகள் மற்றும் நிரந்தரத் திறனிழப்பு மற்றும் மரணத்திற்காக ஒரே தவணையில் வழங்க வேண்டிய பணமளிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

2

**பணியாளர்களின் காப்புறுதிப் பாதுகாப்பு மற்றும் காப்புறுதி ஆவணத்தின் செல்லுபடிக் காலம் ஆகியவற்றைச் சரிபார்த்துக்கொள்ளவும்**

- தொழில், ஊதியம் மற்றும் காப்புறுதிப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய பணியாளர்கள் ஆகிய விவரங்களைக் காப்புறுதி ஆவணங்கள் துல்லியமாகப் பிரதிபலிக்க வேண்டும்.
- காப்புறுதி ஆவணங்கள் காலாவதியாவதற்கு முன்னரே புதுப்பிக்கப்பட வேண்டும்.

3

**பணி தொடர்பான விலக்களிப்பு உட்பிரிவுகள் அனுமதிக்கப்படவில்லை**

- ஆஸ்பெஸ்டாஸுக்குத் தொடர்புடையவை தவிர்த்து, பணி தொடர்பான விலக்களிப்பு உட்பிரிவுகள் அனுமதிக்கப்படவில்லை.
- அத்தகைய உட்பிரிவுகள் காப்புறுதி ஆவணத்தில் இடம்பெற்றிருந்தாலும் கூட, ஒரு செல்லத்தக்க இழப்பீட்டுக் கோரல் செய்யப்படும் வேளையில் அதற்கான இழப்பீட்டை அளிப்பது காப்பீட்டாளர்களின் கடமையாகும்.
- மீட்பை அனுமதிக்கின்ற ஒப்பந்தம் சார்ந்த உட்பிரிவைக் காப்புறுதி ஆவணம் உள்ளடக்கியிருந்தால், அத்தகைய இழப்பீட்டை முதலாளியிடமிருந்து காப்பீட்டாளர்களால் திரும்பப் பெற இயலக்கூடும்.

4

**பல காப்புறுதி பாலிசிகள் இருக்கும் வேளையில், முதலாளியின் காப்பீட்டாளர் தான் பணமளிப்பதற்குக் கடப்பாடு கொண்டிருக்கிறார்**

- காயமடைந்த ஒரு பணியாளருக்குக் காப்புறுதி பாதுகாப்பு அளிக்கின்ற தனிப்பட்ட காப்புறுதிகளைப் பல ஒப்பந்ததாரர்கள் வைத்திருக்கும் போது, ஒரு செல்லுபடியாகும் இழப்பீட்டுக் கோரல் செய்யப்படும் வேளையில் அதற்கு முதலாளியின் காப்பீட்டாளரே முதலில் பதிலளிக்க வேண்டும்.
- காயமடைந்த பணியாளர் குறித்த நேரத்தில் இழப்பீட்டைப் பெறுவதை இது உறுதிசெய்கிறது
- மனிதவள அமைச்சு மதிப்பீட்டு அறிக்கையை1 வழங்குவதற்கு முன்னர், முதலாளியின் காப்பீட்டாளர் சார்பாக இழப்பீட்டை அளிப்பதற்கு தாங்கள் விரும்புவதாக மற்றொரு ஒப்பந்ததாரரின் காப்பீட்டாளர் மனிதவள அமைச்சிடம் தகவல் தெரிவிக்கிறார் எனில், அந்தக் காப்பீட்டாளர் இழப்பீட்டை அளிக்கலாம்.

NOTICE

**[1]மதிப்பீட்டு அறிக்கை என்பது வேலையிடக் காய இழப்பீட்டுக் கோரலின் இறுதிவிளைவைக் குறிப்பிடுகின்ற, இழப்பீட்டுக் கோரலைச் செய்த தரப்பினர்களுக்கு மனிதவள அமைச்சால் வழங்கப்படுகின்ற ஒரு அதிகாரப்பூர்வ ஆவணமாகும்.**

**பயனுள்ள உதவிக்குறிப்பு**

**ஏதேனும் சந்தேகமிருந்தால், காப்புறுதி ஆவணங்களில் உள்ள ஏதேனும் விவரங்களை விளக்குமாறு தனது காப்பீட்டாளரை முதலாளி அணுகலாம்!**

# சம்பவ அறிக்கை

சட்டப்படி, தெரிவிக்கப்பட வேண்டிய விபத்துகளை நீங்கள் ஒரு முதலாளியாக மனிதவள அமைச்சிடம் தெரிவிக்க வேண்டியது கட்டாயமாகும்.

உங்களின் காப்பீட்டாளரிடமும் கூட நீங்கள் முறைப்படி தெரிவிக்க வேண்டியது அவசியமாகும். இல்லையெனில், அது இழப்பீட்டுக் கோரல் செயல்முறைகளைத் தாமதப்படுத்தும். அதனால் உங்களுக்கும் உங்கள் பணியாளருக்கும் பலன் கிடைக்காது.

பணி தொடர்பான விபத்துகள் குறித்து உங்களுக்கு உடனடியாக தகவல் தெரிவிக்கப்படுவதற்கு, உள்நிறுவனத் தகவல் தெரிவிப்பு நடைமுறைகளை உங்கள் பணியாளருக்காக உருவாக்குங்கள். இதன் மூலம், நீங்கள் குறித்த நேரத்தில் மனிதவள அமைச்சிடம் தகவல் தெரிவிக்கவும் முடியும்.





## எதை மற்றும் எப்போது தெரிவிக்க வேண்டும்

வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ், முதலாளி தனது பணியாளர் பின்வருவனற்றை மேற்கொள்ளும் போது மனிதவள அமைச்சிடம் சம்பவங்கள் குறித்துத் தகவல் தெரிவிக்க வேண்டியது கட்டாயமாகும்:

| | கீழ்க்கண்ட சம்பவம் நடைபெற்றதில் இருந்து **10** நாட்காட்டி நாட்களுக்குள் இணையத்தில் சம்பவ அறிக்கையைச் சமர்ப்பிக்கவும்: |
|---|---|
| பணி தொடர்பான ஒரு விபத்தில் மரணமடைந்துள்ளார் | விபத்து நடைபெற்ற தேதி |
| தொழில்சார்ந்த நோய் தொற்றியுள்ளது | நோயின் எழுத்துவடிவிலான நோயறிதலைப் பெற்றுக்கொள்ளுதல் |
| பணி தொடர்பான ஒரு விபத்தில் காயமடைந்துள்ளார் அல்லது உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளார் (உதாரணமாக, பக்கவாதம்/ மாரடைப்பு) வேலை காரணமாக | விபத்து நிகழ்ந்த தேதி, பணியாளர் குறைந்தது **24 மணிநேரங்களுக்கு மருத்துவமனையில்** அனுமதிக்கப்பட்டிருந்தால்; அல்லது<br><br>**4 அல்லது அதற்கு மேற்பட்ட நாட்காட்டி தினங்களுக்கு** மருத்துவ விடுப்பு (தொடர்ச்சியாக அல்லது இடைவிட்டு) அளிக்கப்பட்டிருந்தால், அல்லது |
| பணிபுரியும் வேளையில் உயிரியல்/இரசாயன ஊக்கிக்கு வெளிப்படுவதன் காரணமாக ஒரு நோய் தொற்றியுள்ளது | விபத்து நிகழ்ந்த தேதி, பணியாளர் குறைந்தது **24 மணிநேரங்களுக்கு மருத்துவமனையில்** அனுமதிக்கப்பட்டிருந்தால்; அல்லது<br><br>**4 அல்லது அதற்கு மேற்பட்ட நாட்காட்டி தினங்களுக்கு** மருத்துவ விடுப்பு (தொடர்ச்சியாக அல்லது இடைவிட்டு) அளிக்கப்பட்டிருந்தால், அல்லது |

காயம் அல்லது நோயின் தொடர்விளைவாகப் பணியாளர் மரணமடைந்தால், அதுகுறித்து உங்களுக்குத் தெரியவந்த உடனே நீங்கள் சம்பவக் குறிப்பு எண் மற்றும் மரணத்தின் விவரங்களுடன் மனிதவள அமைச்சுக்கு **http://www.mom.gov.sg/contact-us** -இல் தகவல் தெரிவிக்க வேண்டியது கட்டாயமாகும்.

மருத்துவ விடுப்பு நாட்களின் எண்ணிக்கையை நான் எவ்வாறு கணக்கிட வேண்டும்?

2 மார்ச் புதன் → 3 மார்ச் வியாழன் → 4 மார்ச் வெள்ளி → 5 மார்ச் சனி → 6 மார்ச் ஞாயிறு → 7 மார்ச் திங்கள்

**மருத்துவ விடுப்பு வழங்கப்பட்டது (1 நாள்).**

**பணியாளர் மருத்துவப் பின்தொடர் ஆய்வுக்காகச் சென்றார் அவருக்கு மேற்கொண்டு மருத்துவ விடுப்பு வழங்கப்பட்டது (4 நாட்கள்).**

■ மருத்துவ விடுப்பு நாட்கள்

நீங்கள் மருத்துவ விடுப்பின் நாட்காட்டி தினங்களைக் கணக்கிட வேண்டியது அவசியமாகும். இந்த நிகழ்வில், ஆகமொத்தம் 5 மருத்துவ விடுப்பு தினங்கள் உள்ளன. எனவே, இது தகவல் தெரிவிக்க வேண்டிய ஒரு விபத்தாகும்.

**தகவல் தெரிவிக்க வேண்டிய சம்பவங்களின் உதாரணங்களுக்கு, பின்னிணைப்பு F (பக்கம் 33) -ஐப் பார்க்கவும்.**

## எவ்வாறு தெரிவிக்க வேண்டும்

விபத்து குறித்து அறிவிப்பை **http://www.mom.gov.sg/iReport** -இல் சமர்ப்பிக்கும் போது.



நீங்கள் பின்வரும் தகவல்களை வழங்க வேண்டியிருக்கும்:

**சம்பவம் அல்லது தொழில்வழி நோயின் விவரங்கள்**

\+

**காயமடைந்த நபரின் விவரங்கள்**

- தனிப்பட்ட விவரங்கள்
- வேலை நியமனம்
- காப்புறுதி

\+

**சான்றாவணங்கள்**
(உதாரணமாக, ஊதிய இரசீதுகள், காப்புறுதி ஆவணத்தின் காலஅட்டவணை, மருத்துவ ஆவணங்கள்)

**நீங்கள் கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டிய கால வரம்புக்குள் அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கவில்லை எனில்:**

- மேற்கொண்டு தாமதிக்காமல் அறிக்கையைச் சமர்ப்பிக்கவும்




- நீங்கள் தாமதமாகத் தகவல் தெரிவிப்பதற்கான காரணத்தைக் கூறவும்

**காயமடைந்த பணியாளருக்கு மேலும் மருத்துவ விடுப்பு வழங்கப்படும் போது, நீங்கள் இணையத்தில் அறிக்கையைப் புதுப்பிக்க வேண்டியது அவசியமாகும்.**

# வேலையிடக் காய இழப்பீட்டைக் கோருவதற்கான செயல்முறை

வேலையிடக் காய இழப்பீட்டிற்காகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு, உங்கள் பணியாளருக்கு **விபத்து நடைபெற்ற நாளில் இருந்து ஒரு ஆண்டு** வரை காலஅவகாசம் உள்ளது. உங்கள் பணியாளர் எல்லா மருத்துவச் சந்திப்புத் திட்டங்களிலும் கலந்துகொள்கிறாரா மற்றும் தேவைப்படும் ஆவணங்களை மனிதவள அமைச்சிடம் வழங்குகிறாரா என்பதை உறுதிசெய்துகொள்ளவும். இது கோரல் தீர்வைத் துரிதப்படுத்துவதற்கு உதவும்.


பணிக்கு முன்னதாகவே திரும்புவது, சிறந்த சாத்தியமான இறுதிவிளைவாகும். இந்த இறுதிவிளைவை ஏற்படுத்துவதற்கு, உங்களின் காயமடைந்த பணியாளர், காப்பீட்டாளர் மற்றும் சிகிச்சையளிக்கின்ற மருத்துவருடன் இணைந்து செயல்படுங்கள்.

# வேலையிடக் காய இழப்பீட்டைக் கோருவதற்கான செயல்முறை

1. பணிபுரியும் வேலையில் பணியாளர் காயமடைந்தார்
2. சிகிச்சை அளிக்கவும்
3. விபத்து குறித்து மனிதவள அமைச்சிடம் தகவல் தெரிவிக்கவும்
4. மருத்துவ விடுப்பு ஊதியங்களையும் மருத்துவச் செலவுகளையும் வழங்குங்கள்
5. வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் தனக்காக இழப்பீடு கோருவதற்காகப் பணியாளர் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்கிறாரா என்று உறுதிசெய்துகொள்ளவும்




6. மருத்துவ அறிக்கைப் படிவத்தை அனுப்பவும் மற்றும் மருத்துவ அறிக்கைக் கட்டணங்களைச் செலுத்தவும்
7. எல்லா மருத்துவச் சந்திப்புத் திட்டங்களிலும் பணியாளர் கலந்துகொள்வதை உறுதிசெய்யுங்கள்
8. பணிக்குத் திரும்புவதற்கு ஏற்ற, காயத்திற்குப் பிந்திய சரிசெய்தலை அமைத்துக் கொடுக்கவும்
9. இழப்பீடு கணக்கிடப்படுவதற்காகக் காத்திருக்கவும்
10. மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்ளுங்கள்




11. ஆட்சேபணை எதுமில்லை எனில், அறிக்கை அளிக்கப்பட்ட 21 நாட்களுக்குள் இழப்பீட்டை அளிக்கவும்

## கடப்பாட்டை மதிப்பிடுதல்

**கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் ஒரு பணியாளருக்கு இழப்பீடு அளிக்கப்பட வேண்டும்**



- பணியாளர் வேலை செய்யும் முறையில் உள்ள அல்லது வேலையில் உள்ள அபாயத்தின் காரணமாக ஏற்பட்ட விபத்தினால் காயம் அடைந்தார்

| விபத்துகள் |
|---|
| • எதிர்பாராத அசம்பாவிதம் அல்லது துரதிருஷ்ட சம்பவம்<br>• பணியாளர் பணிபுரிந்துகொண்டிருக்கும் வேளையில் எதிர்பாராத நிகழ்வை விளைவிக்கின்ற உடல்நல நிலைமையை உள்ளடக்குகிறது |

**"பணியாளர் வேலை செய்யும் முறையில் உள்ள அல்லது வேலையில் உள்ள அபாயத்தின் காரணமாக ஏற்படும் விபத்து" என்பது என்ன?**

| "பணியாளர் வேலை செய்யும் முறை" | "வேலையில் உள்ள அபாயம்" |
|---|---|
| பணியாளர் வேலை செய்யும் முறையில் இயல்பாகவே இருக்கக்கூடிய சில அபாயத்தின் காரணமாக விபத்து நிகழ்ந்தது. | பணியாளர் வேலை செய்துகொண்டிருந்த போது அல்லது அவர் நியாயமான அளவிற்குச் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்பட்ட சில தற்செயலான செயல்களை மேற்கொண்டிருந்த போது விபத்து நிகழ்ந்தது. |

**இழப்பீடு அளிக்கப்படுமா இல்லையா என்பதைப் பின்வரும் உதாரணம் விளக்குகிறது:**




ஒரு நிர்வாக உதவியாளர் இடைவேளையின் போது கழிவறைக்குச் சென்றார்




அவர் கழிவறையில் வழுக்கி விழுந்து, அவரது கணுக்காலில் காயம் ஏற்பட்டது.




இந்த விபத்து பணியாளரின் பணி இயல்பின் காரணமாக நிகழ்ந்திருக்கவில்லை என்றாலும் கூட...




...பணியாளர் தனது வேலை நியமனத்தின் போது செய்வதற்கு நியாயமாக எதிர்பார்க்கப்பட்ட ஒரு தற்செயலான செயலைச் செய்துகொண்டிருந்த போது தன்னைக் காயப்படுத்திக்கொண்டார்.

**வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இந்த விபத்துக்கு இழப்பீடு அளிக்கப்பட வேண்டும்.**

## வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் விபத்துக்கு இழப்பீடு பெற இயலுமா என்பதை எவ்வாறு தீர்மானிப்பது

| தனக்குப் பணியில் தான் விபத்து ஏற்பட்டது என்பதை நிரூபிப்பதற்குப் பணியாளரிடம் சான்று உள்ளதா? | அவ்விபத்து பணிக்குத் தொடர்புடையதல்ல என்று நிரூபிப்பதற்கு முதலாளியிடம் சான்று உள்ளதா? | |
|---|---|---|
| ✓ | ✗ | வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் விபத்துக்கு இழப்பீடு அளிக்கப்பட வேண்டும். இழப்பீட்டை அளிப்பதற்கு முதலாளி அல்லது காப்பீட்டாளர் கடப்பாட்டைக் கொண்டிருப்பார். |
| ✓ | ✓ | வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் விபத்துக்கு இழப்பீடு அளிக்க வேண்டியதில்லை. |



## வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் விபத்துக்கு இழப்பீடு பெற இயலுமா என்பதை எவ்வாறு தீர்மானிப்பது (தொடர்கிறது)

வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீடு அளிக்கப்படக்கூடிய அல்லது அளிக்கப்படாமல் போகக்கூடிய சில பொதுவான கற்பனைக் காட்சிகள் இங்கு வழங்கப்பட்டுள்ளன:

| கற்பனைக் காட்சி | வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீடு அளிக்கப்படுமா? |
|---|---|
| ஒரு பணியாளர் தனது வீட்டிற்கும் வேலையிடத்திற்கும் இடையே பயணம் செய்வதற்குத் தனது நிறுவனத்தின் போக்குவரத்து வாகனத்தில் செல்லும் வேளையில் சாலை விபத்தைச் சந்தித்தார். அந்த வாகனம் ஒரு பொதுப் போக்குவரத்து வாகனம் அல்ல. | ✓ |
| ஒரு பணியாளர் தனது வீட்டிற்கும் வேலையிடத்திற்கும் இடையே பயணம் செய்வதற்குத் தனது சொந்த மகிழுந்து/ தனது நண்பரின் மகிழ்ந்து. பொதுப் போக்குவரத்து வாகனத்தில் பயணம் செய்துகொண்டிருந்த வேளையில் சாலை விபத்தைச் சந்தித்தார். | ✗ |
| எந்த வாகனம் என்பதைப் பொருட்படுத்தாது, பணியின் போது மற்றும் பணி நோக்கத்திற்காகப் (உதாரணமாக, ஒரு கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகப் பணியிடத்திலிருந்து கூட்டம் நடைபெறும் இடத்திற்குப் பயணம் செய்வது) பயணம் செய்யும் போது ஏற்படும் விபத்துகள். — A. தனிப்பட்ட வேலையை நிறைவேற்றச் செல்லுதல் போன்ற ஏதேனும் தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டிருக்கவில்லை. | ✓ |
| B. பணியாளர் ஒரு தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டிருந்த வேளையில் விபத்தைச் சந்தித்தார். | ✗ |
| ஒரு சிங்கப்பூர் முதலாளியால் பணியமர்த்தப்பட்டுள்ள ஒரு பணியாளர் தனது வேலை நியமனக் காலத்தின் போது, ஒரு வெளிநாட்டு ஒப்பந்தத்தில் இருக்கும் வேளையில் பணி தொடர்பான காயத்தினால் பாதிக்கப்பட்டார். | ✓ |
| மாலுமி ஒருவர் சிங்கப்பூர் பதிவுபெற்ற கப்பல் ஒன்றில் பயணம் செய்யும் வேளையில் பணி தொடர்பான காயத்தினால் பாதிக்கப்பட்டார். அக்கப்பல் எந்த இடத்தில் இருக்கிறது என்பது ஒரு பொருட்டல்ல. | ✓ |
| மதுபானம் அருந்தியிருந்தது அல்லது ஒரு மருத்துவரால் பரிந்துரைக்கப்பட்டிருக்காத மருந்தை உட்கொண்டிருந்ததே பணியாளரின் காயத்திற்குக் காரணமாகும். | ✗ |
| வேண்டுமென்றே தன்னைக் காயப்படுத்திக்கொள்வது அல்லது ஏற்கெனவே உள்ள ஒரு காயத்தை அதிகரித்துக்கொள்வது. | ✗ |
| பணி தொடர்பான சண்டையில் அப்பணியாளர் காயமடைந்தார் என்றாலும் அவர் சண்டையில் ஈடுபட்டிருக்கவில்லை, அல்லது அவர் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்கு முயற்சி செய்த வேளையில் அல்லது சண்டையை விலக்கி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்ட வேளையில், உயிர்/சொத்தைப் பாதுகாக்கும் வேளையில் அல்லது சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றும் வேளையில் காயமடைந்தார். | ✓ |

வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீடு அளிக்க வேண்டிய தொழில்வழி நோய்களின் பட்டியலைப் பின்னிணைப்பு அ (பக்கங்கள் 27-29) -இல் பார்க்கவும்.

## வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் எந்த வகையான இழப்பீட்டைக் கோர முடியும்

### மருத்துவ விடுப்பு ஊதியங்கள்



| | வெளிநோயாளி மருத்துவ விடுப்பு | மருத்துவமனை அனுமதி விடுப்பு |
|---|---|---|
| முழு ஊதியம் | 14 நாட்கள் வரை | 60 நாட்கள் வரை |
| 2/3 பங்கு ஊதியம் | விபத்து நடைபெற்ற 15வது தினம் முதல் 1 ஆண்டு வரை | விபத்து நடைபெற்ற 61வது தினம் முதல் 1 ஆண்டு வரை |

இலகுவான வேலை:

- பணியாளர் வேலைக்குத் திரும்புவதற்கான உடற்தகுதியைக் கொண்டிருக்கிறார், ஆனால் அவரால் பணியில் முன்பைப் போல வேலைசெய்ய முடியாது.
- இதை மருத்துவ விடுப்பாகக் கருத்தில் எடுத்துக்கொள்ள முடியாது, மேலும் மருத்துவ விடுப்பு ஊதியங்களுக்காக ஈடுசெய்ய முடியாது.

ஏதேனும் சந்தேகமிருந்தால், அப்பணியாளரால் எத்தகைய இலகுவான வேலைகளைச் செய்ய முடியும் என்பதை மருத்துவருடன் சரிபாருங்கள்

**பணியாளரின் சாராசரி மாதாந்தர ஊதியத்தின் (AME) அடிப்படையில்**

**சராசரி மாதாந்தர ஊதியக் கணக்கீடு**

**AME =** [கடந்த 12 மாதங்களில் வழங்கப்பட்ட ஊதியங்கள்*] / 12

- *விபத்து நடைபெற்ற தேதிக்கு முன்னர் கடைசி 12 மாதங்களாக வழங்கிய மிகைநேரப் பணி ஊதியம், உணவு செலவுத்தொகை, ஊக்கத்தொகை மற்றும் மற்ற எல்லா செலவுத்தொகை(கள்) இவற்றில் உள்ளடங்கலாம்.
- முதலாளியின் மசேநி சந்தாக்கள், உங்களின் வேலை நியமனத்திற்குத் தொடர்புடைய ஏதேனும் சிறப்புச் செலவுகளுக்காக அளிக்கப்பட்ட பணம் (உதாரணமாக, போக்குவரத்துச் செலவுத்தொகை/ஈட்டுத்தொகை) ஆகியவற்றைச் சராசரி மாதாந்தர ஊதியங்கள் (AME) உள்ளடக்கவில்லை.
- **முதலாளி தனது பணியாளரின் அடுத்த ஊதிய தினத்திற்குள் அளிக்க வேண்டியது கட்டாயமாகும்.**

### மருத்துவச் செலவுகள்



- மருத்துவ ஆலோசனைக் கட்டணங்களுக்கான செலவு
- உடற்பயிற்சி மருத்துவருக்கான கட்டணங்கள்
- மருந்துகளுக்கான செலவு
- தொழில்வழி மற்றும் பேச்சு சிகிச்சைமுறை முதலானவை

| உச்ச வரம்புகள் | |
|---|---|
| 1 ஜனவரி 2016 -க்கு முன்னர் நிகழ்ந்த விபத்துகளுக்காக | 1 ஜனவரி 2016 -க்குப் பிறகு நிகழ்ந்த விபத்துகளுக்காக |
| $30,000 வரை அல்லது விபத்து நடந்த தேதியில் இருந்து ஒரு ஆண்டு வரை, இதில் எது முதலில் வருகிறதோ அதுவரை | $36,000 வரை அல்லது விபத்து நடந்த தேதியில் இருந்து ஒரு ஆண்டு வரை, இதில் எது முதலில் வருகிறதோ அதுவரை |

- முதலாளியால் வழங்கப்பட வேண்டும்.
- சிங்கப்பூர் பதிவுபெற்ற மருத்துவரால் சிகிச்சை அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.
- 1 ஜனவரி 2016 அன்று மற்றும் அதற்குப் பிறகு நிகழ்ந்த விபத்துகளுக்காக, சம்பவ மேலாண்மை, செயல்பாடு சார்ந்த திறன் மதிப்பாய்வு மற்றும் பணித்தல மதிப்பீடு ஆகியவை போன்ற பணிக்குத் திரும்புவதற்கான வசதியை ஏற்படுத்தித் தருகின்ற சிகிச்சைகளுக்கு, வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்திற்குட்பட்ட மருத்துவச் செலவுகளின் அங்கமாக இழப்பீடு கோர முடியும்.

## வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் எந்த வகையான இழப்பீட்டைக் கோர முடியும் (தொடர்கிறது)

**நிரந்தரத் திறனிழப்பு மற்றும் மரணத்திற்காக ஒரே தவணையில் இழப்பீடு**

| | நிரந்தரத் திறனிழப்பு இழப்பீட்டுக்கான | | மரணம் இழப்பீட்டுக்கான | |
|---|---|---|---|---|
| வழங்க வேண்டிய தொகை எப்போது... | ஒரு காயம் அல்லது உடல்நலக் குறைவானது, பணியாளரின் பணிபுரிவதற்கான திறன் மீது நிரந்தரமான விளைவைக் கொண்டிருக்கும் போது | | காயமானது பணியாளருக்கு மரணத்தை விளைவித்த போது | |
| இவருக்கு வழங்க வேண்டிய தொகை... | காயமடைந்த பணியாளருக்கு | | மரணமடைந்த பணியாளரின் சார்பாளர்களுக்கு | |
| இழப்பீட்டைக் கணக்கிடுவதற்கான சூத்திரம் | வழங்க வேண்டிய தொகை = [பணியாளரின் சராசரி மாதாந்தர ஊதியம்] x [வயது பெருக்கல் விகிதம்][1] x [நிரந்தரத் திறனிழப்பின்][2] | | வழங்க வேண்டிய தொகை = [பணியாளரின் சராசரி மாதாந்தர ஊதியம்] x [வயது பெருக்கல் விகிதம்][1] | |
| | குறைந்தபட்சம் | அதிகபட்சம் | குறைந்தபட்சம் | அதிகபட்சம் |
| 1 ஜனவரி 2016 -க்கு **முன்னர்** நிகழ்ந்த விபத்துகளுக்காக | [$73,000 x % நிரந்தரத் திறனிழப்பு] | [$218,000 x % நிரந்தரத் திறனிழப்பு] | $57,000 | $170,000 |
| 1 ஜனவரி 2016 -க்குப் **பிறகு** நிகழ்ந்த விபத்துகளுக்காக | [$88,000 x % நிரந்தரத் திறனிழப்பு] | [$262,000 x % நிரந்தரத் திறனிழப்பு][3] | $69,000 | $204,000 |

**% நிரந்தரத் திறனிழப்புக்கான இழப்பீட்டுத் தொகையை எவ்வாறு கணக்கிட வேண்டும் என்பது குறித்து மேலும் புரிந்துகொள்ள, பின்னிணைப்பு இ (பக்கங்கள் 31-32) -ஐப் பார்க்கவும்.**

[1]வயது பெருக்கல் விகித அட்டவணைப் பின்னிணைப்பு ஆ (பக்கம் 30) -ஐப் பார்க்கவும்.

[2]%நிரந்தரத் திறனிழப்பானது (% PI), பணியாளரின் நிலைமை நிலைப்படுத்தப்பட்ட பிறகு மருத்துவரின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இந்த மதிப்பீடு **"பணியாளர்களின் இழப்பீட்டிற்காக விபத்துக் காயங்கள் மற்றும் தொழில்வழி நோய்களை மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டியில் (GATIOD)"** வரையறுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. இந்த வழிகாட்டி **http://www.mom.gov.sg** -இல் கிடைக்கிறது.

[3]காயமடைந்த பணியாளருக்கான பராமரிப்புச் செலவை ஈடுசெய்வதற்காக ஒட்டுமொத்த நிரந்தரத் திறனிழப்பைக் கொண்ட பணியாளர்களுக்குச் செலுத்திய கூடுதல் 25% இழப்பீட்டை இத்தொகை உள்ளடக்கவில்லை.

## நிரந்தரத் திறனிழப்பு மற்றும் மரணத்திற்காக இழப்பீடு கோருவதற்கான வழிமுறைகள்

**எனது பணியாளர் பணியின் காரணமாகத் தன்னைக் காயப்படுத்திக்கொண்டார் அல்லது மரணமடைந்தார். நான் இப்போது என்ன செய்ய வேண்டும்?**

| நிரந்தரத் திறனிழப்பு | மரணம் |
|---|---|
|  படிநிலை 1: விபத்து குறித்துத் தகவல் தெரிவியுங்கள் | |
| **http://www.mom.gov.sg/iReport வாயிலாக மனிதவள அமைச்சிடம் அறிக்கையைச் சமர்ப்பியுங்கள். விபத்து குறித்து உங்கள் காப்பீட்டாளருக்குத் தகவல் தெரிவியுங்கள்** | |
| • உங்கள் காப்பீட்டாளர் இழப்பீட்டுக் கோரலைத் தீர்வு செய்யும் வரையில் காத்திருக்கும் வேளையில், உங்கள் பணியாளருக்கு அவரது அடுத்த ஊதிய தினத்திற்குள் நீங்கள் மருத்துவ விடுப்பு ஊதியங்களை வழங்க வேண்டியது கட்டாயமாகும். அதற்குப் பிறகு உங்கள் காப்பீட்டாளரிடமிருந்து ஈட்டுத்தொகையைப் பெற்றுக்கொள்ளுங்கள். | |

NOTICE

**தேவைப்படும் மருத்துவ விடுப்பின் காலத்தை விடக் குறைவாகப் பரிந்துரைப்பதற்கு மருத்துவர்களைத் தூண்டக்கூடாது. காயமடைந்த பணியாளர் நலமடைவதற்குப் போதுமான மருத்துவ விடுப்பு வழங்கப்பட வேண்டும்.**



## நிரந்தரத் திறனிழப்பு மற்றும் மரணத்திற்காக இழப்பீடு கோருவதற்கான வழிமுறைகள் (தொடர்கிறது)

| நிரந்தரத் திறனிழப்பு | |
|---|---|
|  |  |
| படிநிலை 2: இழப்பீட்டுக் கோரலைக் கையாளுதல் | |
| **பணியாளர் ஒரு இழப்பீட்டுக் கோரலைச் செய்கிறார்** | **பணியாளர் மருத்துவ மதிப்பீடு செய்துகொள்ளச் செல்கிறார்** |
| • மருத்துவ அறிக்கைப் படிவத்தின் நகல் ஒன்றை மனிதவள அமைச்சு உங்களுக்கு அனுப்பி வைக்கும்.<br>• உங்கள் பணியாளர் விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்கிறாரா என்பதை உறுதிசெய்துகொள்ளவும்.<br>• மருத்துவ அறிக்கைப் படிவத்தை அனுப்பவும். மேலும், மருத்துவமனை அல்லது மருந்தகத்திற்கு மருத்துவ அறிக்கைக் கட்டணங்களைச் செலுத்தவும்.<br>• பணியாளருடைய காயத்தின் அளவை மருத்துவமனை அல்லது மருந்தகம் மதிப்பீடு செய்யும். | • எல்லா மருத்துவச் சந்திப்புத் திட்டங்களிலும் உங்கள் பணியாளர் கலந்துகொள்வதை உறுதிசெய்யுங்கள்<br>• இது அவர் வேகமாக நலமடைவதற்கும், இழப்பீட்டுக் கோரல்கள் தீர்க்கப்படுவதற்கும் உதவும்.<br>• நிரந்தரத் திறனிழப்பின் அளவை மதிப்பீடு செய்வதற்கு அவசியமான அவரது மருத்துவச் சிகிச்சை மற்றும் மருத்துவப் பரிசோதனைகளுக்கான கட்டணங்கள் மருத்துவமனைக்குத் தேவைப்பட்டால், நீங்கள் மருத்துவச் செலவுகளுக்குத் தொகை அளிக்க வேண்டும் அல்லது உத்திரவாதக் கடிதத்தைச் (LOG) சமர்ப்பிக்க வேண்டும். உதாரணமாக, முதுகுக் காயங்களை மதிப்பீடு செய்வதற்கு, மருத்துவரால் மற்ற வகையில் அறிவுறுத்தப்படாத வரையில், MRI (காந்த அதிர்வுப் படமாக்கம் - Magnetic Resonance Imaging) ஒரு அவசியமான பரிசோதனையாகும். |

**மரணம்**


**படிநிலை 2: இழப்பீட்டுக் கோரலைக் கையாளுதல்**

**கூடுதல் ஆவணங்களை மனிதவள அமைச்சிடம் http://www.mom.gov.sg/WicSubmit -இல் சமர்ப்பிக்கவும்.**

- பின்வரும் ஆவணங்களை அளிக்கவும்:
  - மரணச் சான்றிதழ்
  - பணி விபத்து நடைபெற்ற தேதியை உள்ளடக்குகின்ற, செல்லத்தக்க வேலையிடக் காய இழப்பீட்டுக் காப்புறுதி ஆவணத்தின் நகல்
  - விபத்து நடைபெற்றதற்கு முன்னர் உள்ள 12 மாதங்களுக்கான ஊதிய இரசீதுகள்
  - இரத்த சம்மந்தமுள்ள உறவினர்(களின்) விவரங்கள்
  - வெளிநாட்டுப் பணியாளர்களுக்கான கடவுச்சீட்டின் நகல்
- சார்பாளர்களின் அடையாளத்தை உறுதிசெய்வதற்கான கோரல் படிவம் மற்றும் சான்றாவணங்களுக்காக மனிதவள அமைச்சு இரத்த சம்மந்தமுள்ள உறவினர்(களைத்) தொடர்புகொள்ளும்.
- இழப்பீட்டுக் கோரலுக்கு இழப்பீடு அளிக்க முடியுமா என்பதை மதிப்பீடு செய்வதற்கு, நீங்கள், உங்கள் பணியாளரின் மேற்பார்வையாளர் அல்லது/மற்றும் சகப்பணியாளர்கள் ஆகியோர் மனிதவள அமைச்சுடனான ஒரு நேர்காணலில் கலந்துகொள்ள வேண்டியிருக்கும்.

## நிரந்தரத் திறனிழப்பு மற்றும் மரணத்திற்காக இழப்பீடு கோருவதற்கான வழிமுறைகள் (தொடர்கிறது)

| நிரந்தரத் திறனிழப்பு | மரணம் |
|---|---|




**படிநிலை 3:**
**மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்ளுங்கள்**

- தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்த பிறகு, இழப்பீட்டுத் தொகை கணக்கிடப்படும்.
- இழப்பீட்டுத் தொகை குறித்து உங்களுக்கு, உங்கள் பணியாளர் அல்லது உங்கள் பணியாளரின் இரத்த சம்மந்தமுள்ள உறவினர்(கள்) மற்றும் உங்கள் காப்பீட்டாளருக்குத் தெரிவிப்பதற்காக மனிதவள அமைச்சு ஒரு மதிப்பீட்டு அறிக்கையை அனுப்பி வைக்கும்.
- அந்த அறிக்கைக்கு யாரேனும் ஆட்சேபணை தெரிவித்தால், அவர்கள் 14 நாட்களுக்குள் மனிதவள அமைச்சிடம் தெரிவிக்க வேண்டும்.
- ஆட்சேபணைகள் எதுவும் இல்லை என்றால், அந்த அறிக்கையின் தேதியில் இருந்து 21 நாட்களுக்குள் நீங்களோ அல்லது உங்கள் காப்பீட்டாளரோ இழப்பீட்டுத் தொகையைச் செலுத்த வேண்டியது அவசியமாகும்.
- தாமதமாக வழங்கப்படும் தொகைக்கு வட்டி விதிக்கப்படலாம்.



| நிரந்தரத் திறனிழப்பு | மரணம் |
|---|---|



### படிநிலை 4:
### ஆட்சேபணை ஏதேனும் இருந்தால், அவற்றைத் தீர்த்துக்கொள்ளவும்

- ஆட்சேபணை தெரிவிக்கின்ற தரப்பினர் தங்களுடைய ஆட்சேபணையை நிரூபிப்பதற்குச் சான்றாவணங்களை வழங்க வேண்டியது அவசியமாகும்.
- இந்தச் சர்ச்சை தீர்க்கப்படவில்லை என்றால், இந்த வழக்கு விசாரணைக்கு முந்தைய விவாதத்தில் (PHC) துணை ஆணையர் (வேலையிடக் காய இழப்பீடு) முன்பாக விசாரிக்கப்படும்.
- இந்தச் சர்ச்சை விசாரணைக்கு முந்தைய விவாதத்திலும் கூட தீர்க்கப்படவில்லை என்றால், இந்த வழக்கு துணை ஆணையர் (வேலையிடக் காய இழப்பீடு) முன்பாக விசாரிக்கப்படுவதற்கு அனுப்பிவைக்கப்படும்.

- ஆட்சேபணைகளின் உதாரணங்கள்:
  - காயம் அல்லது நோயானது பணிக்குத் தொடர்புடையது அல்ல (சாட்சிகளின் பட்டியல் மற்றும் ஏதேனும் பிற சான்றாவணங்களை வழங்கவும், உதாரணமாக, புகைப்படங்கள், காணொளி)
  - மதிப்பீட்டு அறிக்கையில் சராசரி மாதாந்தர ஊதியம் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (ஊதிய இரசீதுகள் மற்றும் நேர அட்டைகளை வழங்கவும்)

- மதிப்பீடு செய்கின்ற மருத்துவரால் வழங்கப்பட்டிருக்கும் % நிரந்தரத் திறனிழப்பு மதிப்பீட்டை ஒரு தரப்பு ஆட்சேபித்தால்:
  - வேலையிடக் காய இழப்பீடு மருத்துவக் கழகத்தால் நியமிக்கப்படும் ஒரு குழுவிடம் பணியாளர் மறு-மதிப்பீட்டிற்கு உட்பட வேண்டும்.
  - மருத்துவக் கழகத்திற்கான கட்டணம் ($357) மற்றும் பிற அத்தியாவசியப் பரிசோதனைகளுக்கான செலவுகளை ஆட்சேபணை தெரிவிக்கின்ற தரப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். குறித்த நேரத்தில் தொகை செலுத்தாவிட்டால், ஆட்சேபணை ஏற்றுக்கொள்ளப்படாமல் போகலாம்.
  - மருத்துவக் கழகத்தின் முடிவே இறுதியானது.

எல்லா சர்ச்சைகளும் தீர்க்கப்பட்ட பிறகு, உத்தரவுத் தேதியில் இருந்து 21 நாட்களுக்குள் நீங்களோ அல்லது உங்கள் காப்பீட்டாளரோ இழப்பீட்டுத் தொகையைச் செலுத்த வேண்டும் என்ற ஒரு உத்தரவை மனிதவள அமைச்சு அனுப்பி வைக்கும்.

# பின்னிணைப்புகள்





## பின்னிணைப்பு A: இழப்பீடு பெற முடிகின்ற தொழில்வழி நோய்களின் பட்டியல்

| S/N | தொழில்வழி நோய் அல்லது காயத்தின் விவரிப்பு | தொழிலின் இயல்பு |
|---|---|---|
| 1 | ஆந்த்ராக்ஸ் | ஆந்த்ராக்ஸ் வித்துக்கள் அல்லது பாக்டீரியா உடன் நோய்த்தொற்றிய விலங்குகள், நோய்த்தொற்றிய விலங்குகளின் திசுக்கள் அல்லது உற்பத்திகள், அல்லது ஆந்த்ராக்ஸ் வித்துக்கள் அல்லது பாக்டீரியாவை உள்ளடக்குகின்ற ஏதேனும் பொருட்கள் அல்லது சாரங்களுக்கு ஆளாகும் சூழலைக் கொண்ட ஏதேனும் வேலை. |
| 2 | கல்நார் படிதல் நோய் (ஆஸ்பெஸ்டோசிஸ்) | ஆஸ்பெஸ்டாஸை (கல்நார்) நேரடியாகக் கையாள நேரிடும் அனைத்து வகை வேலை. |
| 3 | அழுத்தப்புண் | காற்றழுத்தத்தை எதிர்கொள்ள நேரிடும் அனைத்து வகை வேலைகள். |
| 4 | பருத்தி - சணல் தூசியேற்ற நுரையீரல் நோய் (பிஸ்ஸினோசிஸ்) | பதப்படுத்தாதப் பச்சைப் பருத்தி நாரைக் கையாள நேரிடும் அனைத்து வகை வேலை |
| 5 | அகச்சிவப்பு (இன்ஃப்ரா-ரெட்), புறவூதா (அல்ட்ராவயலட்) அல்லது எக்ஸ்ரே கதிரியக்கத்தின் காரணமாக கண்புரை | அகச்சிவப்பு, புறவூதா அல்லது எக்ஸ்ரே கதிரியக்கத்திற்கு அடிக்கடி அல்லது நீண்ட காலத்திற்கு நேரடியாக ஆளாகும் வகையில் ஈடுபடுகின்ற ஏதேனும் வேலை. |
| 6 | காற்றழுத்த நோய் அல்லது அதன் பின்விளைவுகள் - எலும்புத் திசு அழிவு நோய் உட்பட | காற்றழுத்தத்தை எதிர்கொள்ள நேரிடும் அனைத்து வகை வேலைகள். |
| 7 | அயனியாக்கக் கதிரியக்கத்தால் ஏற்படும் நோய்கள் | கதிரியக்க ஓரிடத் தனிமம் (ரேடியோ ஐஸோடொப்) அல்லது கதிர்வீச்சுக்கு உட்பட்ட கருவியில் இருக்கும் அயனியாக்கத் துகள்களுக்கு நேரடியாக ஆளாகும் வகையில் ஈடுபடுகின்ற ஏதேனும் வேலை. |
| 8 | அதிகப்படியான வெப்பத்தின் காரணமாக ஏற்படும் நோய்கள் | அதிகப்படியான வெப்பத்திற்கு ஆளாகும்படி ஈடுபடுகின்ற ஏதேனும் வேலை. |
| 9 | புரவிக்காய்ச்சல் | பர்க்ஹோல்டெரியா மல்லீய் பாக்டீரியம் உடன் நோய்த்தொற்றிய விலங்குகள், நோய்த்தொற்றிய விலங்குகளின் திசுக்கள் அல்லது உற்பத்திகள், அல்லது பர்க்ஹோல்டெரியா மல்லீய் பாக்டீரியமை உள்ளடக்குகின்ற ஏதேனும் பொருட்கள் அல்லது சாரங்களுக்கு ஆளாகும் சூழலைக் கொண்ட ஏதேனும் வேலை. |
| 10 | லெப்டோஸ்பிரோசிஸ் அல்லது அதன் தொடர் நிகழ்வுகள் | லெப்டோஸ்பிரோசிஸ் பாக்டீரியா உடன் நோய்த்தொற்றிய விலங்குகள் அல்லது மாசடைந்த சுற்றுப்புறத்திற்கு அல்லது லெப்டோஸ்பிரோசிஸ் பாக்டீரியாவை உள்ளடக்குகின்ற ஏதேனும் பொருட்கள் அல்லது சாரங்களுக்கு ஆளாகும் சூழலைக் கொண்ட ஏதேனும் வேலை. |
| 11 | கல்லீரல் இரத்தக் குழாய்ப் புற்று | வினைல் குளோரைடு மோனோமர் அல்லது ஆர்செனிக்குக்கு ஆளாகும் வகையில் ஈடுபடுகின்ற ஏதேனும் வேலை. |
| 12 | மெஸோதெலியோமா (இடைத்தோலியப்புற்று) | ஆஸ்பெஸ்டாஸை (கல்நார்) நேரடியாகக் கையாள நேரிடும் அனைத்து வகை வேலை. |

| | | |
|---|---|---|
| 13 | மேற்கரத்தின் தசைக்கூட்டுக் கோளாறுகள் | திரும்பத் திரும்ப மேற்கொள்கின்ற அசைவு, கடுமையான முயற்சி, முரண்பட்ட உடல் இருக்கை நிலைகள் அல்லது அதிர்வு, மேற்கரங்களைப் பாதிக்கின்ற செயல்களில் ஈடுபடுகின்ற தொழில்வழி அபாய விகிதங்களுக்கு ஆளாகும்படி ஈடுபடுகின்ற ஏதேனும் வேலை. |
| 14 | அதிக இரைச்சலால் ஏற்படும் காதுகேளாமை | அதிக இரைச்சலை நீண்ட நேரம் எதிர்கொள்ளும் வகையில் ஈடுபடுகின்ற ஏதேனும் வேலை. |
| 15 | தொழில்வழி ஆஸ்துமா | சுவாச மண்டலத்திற்கு எரிச்சலை அல்லது நுட்பமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் இரசாயனம் அல்லது பிற ஊக்கிக்கு ஆளாகும் வகையில் ஈடுபகின்ற ஏதேனும் வேலை. |
| 16 | தொழில்வழிச் சருமப் புற்றுநோய்கள் | பாலிசைக்ளிக் ஹைட்ரோகார்பன்கள், தார், கரிப்பிசின், பிட்டுமென், மினரல் எண்ணெய் (பாரா∴பின் உள்பட), புகைக்கரி அல்லது உள்ளியம் அடங்கியவை, அல்லது இந்தச் சாரங்களின் ஏதேனும் கூட்டுப்பொருள், தயாரிப்புப்பொருள் அல்லது கசடுகளுக்கு அல்லது புறவூதாக் கதிரியக்கத்திற்கு ஆளாகும்படி ஈடுபடுகின்ற ஏதேனும் வேலை. |
| 17 | தொழில்வழிச் சரும நோய்கள் | சருமத்தை பாதிப்பதாக அறியப்பட்ட ஏதேனும் சரும எரிச்சல் அல்லது நுட்பமான பாதிப்புக்கு ஆளாகும் வகையில் ஈடுகின்ற ஏதேனும் வேலை. |
| 18 | இவற்றின் மூலம் நஞ்சாதல் — | இவற்றுக்கு ஆளாகும் வகையில் ஈடுபடுகின்ற ஏதேனும் வேலை — |
| | A. ஆர்செனிக் | ஆர்செனிக் அல்லது அதனுடைய ஏதேனும் கூட்டுப்பொருட்கள், அல்லது ஆர்செனிக் அல்லது அதனுடைய ஏதேனும் கூட்டுப்பொருட்களை உள்ளடக்கியுள்ள ஏதேனும் கலவை அல்லது கரைசல்; |
| | B. பென்ஸீன் அல்லது பென்ஸீனின் அமைப்பொத்தபொருள் | பென்ஸீன் அல்லது பென்ஸீனின் அமைப்பொத்தபொருட்கள், அல்லது பென்ஸீன் அல்லது பென்ஸீனின் அமைப்பொத்தபொருட்களை உள்ளடக்கியுள்ள ஏதேனும் கலவை அல்லது கரைசல்; |
| | C. காட்மியம் | காட்மியம் அல்லது அதனுடைய ஏதேனும் உட்பொருட்கள், அல்லது காட்மியம் அல்லது அதனுடைய ஏதேனும் உட்பொருட்களை உள்ளடக்கியுள்ள ஏதேனும் கலவை அல்லது கரைசல்; |
| | D. கார்பமேட்டுகள் | கார்பமேட், அல்லது ஏதேனும் கார்பமேட்டை உள்ளடக்கியுள்ள ஏதேனும் கலவை அல்லது கரைசல்; |
| | E. கார்பன் டைசல்பைடு | கார்பன் டைசல்பைடு அல்லது அதனுடைய ஏதேனும் உட்பொருட்கள், அல்லது கார்பன் டைசல்பைடு அல்லது அதனுடைய ஏதேனும் உட்பொருட்களை உள்ளடக்கியுள்ள ஏதேனும் கலவை அல்லது கரைசல்; |
| | F. கார்பன் டைஆக்ஸைடு வாயு | கார்பன் டைஆக்ஸைடின் அதிகப்படியான அளவுகள்; |
| | G. கார்பன் மோனாக்ஸைடு வாயு | கார்பன் மோனாக்ஸைடின் அதிகப்படியான அளவுகள்; |
| | H. சைனைடு | சைனைடு, அல்லது ஏதேனும் சைனைடு உள்ளடக்கியுள்ள ஏதேனும் கலவை அல்லது கரைசல்; |

## பின்னிணைப்பு A: இழப்பீடு பெற முடிகின்ற தொழில்வழி நோய்களின் பட்டியல் (தொடர்கிறது)

| | | |
|---|---|---|
| | I. ஹைட்ரோகார்பன் உட்பொருட்களின் ஹாலோஜென் வழிப் பொருட்கள் | ஹைட்ரோகார்பன் உட்பொருட்களின் ஏதேனும் ஹாலோஜென் வழிப் பொருட்கள் அல்லது ஹைட்ரோகார்பன் உட்பொருட்களின் ஏதேனும் ஹாலோஜென் வழிப் பொருட்கள் உள்ளடங்கியுள்ள ஏதேனும் கலவை அல்லது கரைசல்; |
| | J. ஹைட்ரஜன் சல்ஃபைடு | ஹைட்ரஜன் சல்ஃபைடு; |
| | K. ஈயம் | ஈயம் அல்லது அதனுடைய ஏதேனும் உட்பொருட்கள் அல்லது ஈயம் அல்லது அதனுடைய ஏதேனும் உட்பொருட்கள் உள்ளடங்கியுள்ள ஏதேனும் கலவை அல்லது கரைசல்; |
| | L. மாங்கனீஸ் | மாங்கனீஸ் அல்லது அதனுடைய ஏதேனும் உட்பொருட்கள் அல்லது மாங்கனீஸ் அல்லது அதனுடைய ஏதேனும் உட்பொருட்கள் உள்ளடங்கியுள்ள ஏதேனும் கலவை அல்லது கரைசல்; |
| | M. பாதரசம் | பாதரசம் அல்லது அதனுடைய ஏதேனும் உட்பொருட்கள் அல்லது பாதரசம் அல்லது அதனுடைய ஏதேனும் உட்பொருட்கள் உள்ளடங்கியுள்ள ஏதேனும் கலவை அல்லது கரைசல்; |
| | N. நைட்ரஜனின் ஆக்ஸைடுகள் | நைட்ரஜனின் ஆக்ஸைடுகளின் அதிகப்படியான அளவுகள்; |
| | O. கரிமப்பாஸ்பேட்டுகள் | கரிமப்பாஸ்பேட்டுகள்; |
| | P. பாஸ்பரஸ் | பாஸ்பரஸ் அல்லது அதனுடைய ஏதேனும் உட்பொருட்கள் அல்லது பாஸ்பரஸை உள்ளடங்கியுள்ள ஏதேனும் கலவை அல்லது கரைசல்; |
| 19 | சிலிக்கா நோய் (சிலிக்காசிஸ்) | சிலிக்கான் தூசுக்கு நேரடியாக ஆளாகும் வகையில் ஈடுபடுகின்ற ஏதேனும் வேலை. |
| 20 | நச்சேற்றக் கல்லீரலழற்சி | பென்ஸீன் அல்லது வினைல் குளோரைடு மோனோமெரின் டெட்ராகுளோரோஈத்தேன், நைட்ரோ-வழிப்பொருட்கள் அல்லது அமினோ-வழிப்பொருட்களுக்கு நேரடியாக ஆளாகும் வகையில் ஈடுபடுகின்ற ஏதேனும் வேலை. |
| 21 | காசநோய் | இதில் ஈடுபடுகின்ற ஏதேனும் வேலை —<br>A. காசநோய் தொற்றின் ஆதாரத்துடன் நெருக்கமாக மற்றும் அடிக்கடி தொடர்புகொண்டிருத்தல், உதாரணமாக, மருத்துவச் சிகிச்சையில் அல்லது காசநோயால் பாதிக்கப்பட்டிருக்கும் நபர் அல்லது நபர்களைப் பராமரித்தல் அல்லது அத்தகைய சிகிச்சை அல்லது பராமரிப்புக்காக ஒரு சேவைபுரிவதில்; அல்லது<br>B. காசநோய்த் தொற்றின் ஆதாரமான ஏதேனும் பொருட்களைக் கையாளுதல், உதாரணமாக, ஒரு ஆய்வகத்தில். |
| 22 | கண்ணின் கருவிழி மேற்புறம் புண்ணாதல் | தார், கரிப்பிசின், பிட்டுமென், மினரல் எண்ணெய் (பாராஃபின் உள்பட), புகைக்கரி அல்லது இந்தச் சாரங்களின் ஏதேனும் கூட்டுப்பொருள், தயாரிப்புப்பொருள் அல்லது கசடுகளுக்கு நேரடியாக ஆளாகும் வகையில் ஈடுபடுகின்ற ஏதேனும் வேலை. |

## பின்னிணைப்பு B: வயது பெருக்கல் விகிதத்தின் அட்டவணை

| விபத்துக்குப் பிறகு வரும் பிறந்த நாளின் போது பணியாளரின் வயது | நிரந்தரத் திறனிழப்பு | மரணம் | விபத்துக்குப் பிறகு வரும் பிறந்த நாளின் போது பணியாளரின் வயது | நிரந்தரத் திறனிழப்பு | மரணம் |
|---|---|---|---|---|---|
| 14 | 181 | 136 | 41 | 142 | 107 |
| 15 | 180 | 135 | 42 | 140 | 106 |
| 16 | 179 | 135 | 43 | 138 | 105 |
| 17 | 178 | 134 | 44 | 136 | 104 |
| 18 | 178 | 134 | 45 | 134 | 103 |
| 19 | 177 | 133 | 46 | 132 | 102 |
| 20 | 176 | 132 | 47 | 130 | 101 |
| 21 | 175 | 132 | 48 | 128 | 100 |
| 22 | 174 | 131 | 49 | 126 | 98 |
| 23 | 173 | 130 | 50 | 124 | 96 |
| 24 | 172 | 129 | 51 | 122 | 94 |
| 25 | 170 | 128 | 52 | 120 | 92 |
| 26 | 169 | 127 | 53 | 118 | 90 |
| 27 | 168 | 127 | 54 | 116 | 88 |
| 28 | 167 | 125 | 55 | 114 | 86 |
| 29 | 165 | 124 | 56 | 111 | 84 |
| 30 | 164 | 123 | 57 | 108 | 82 |
| 31 | 162 | 122 | 58 | 105 | 80 |
| 32 | 160 | 121 | 59 | 102 | 78 |
| 33 | 159 | 120 | 60 | 99 | 75 |
| 34 | 157 | 118 | 61 | 96 | 72 |
| 35 | 155 | 117 | 62 | 92 | 68 |
| 36 | 153 | 115 | 63 | 87 | 63 |
| 37 | 151 | 114 | 64 | 82 | 58 |
| 38 | 149 | 112 | 65 | 77 | 53 |
| 39 | 146 | 110 | 66+ | 72 | 48 |
| 40 | 144 | 108 | – | – | – |

## பின்னிணைப்பு C: இழப்பீட்டுத் தொகையைக் கணக்கிடுவது தொடர்பான விளக்கப்படம்

% நிரந்தரத் திறனிழப்புக்கான (% நிரந்தரத் திறனிழப்பு) வரம்புகளானது, காயமடைந்த பணியாளர் அனுபவிக்கின்ற நிரந்தரத் திறனிழப்பின் மிகச்சரியான சதவீதத்திற்கு ஏற்பட சரிசெய்யப்பட்டுள்ளன.

% நிரந்தரத் திறனிழப்புக்கான இழப்பீட்டுத் தொகையை எவ்வாறு கணக்கிட வேண்டும் என்பதை விளக்குகின்ற ஒரு உதாரணம் இங்கு தரப்பட்டுள்ளது:



காயமடைந்த பணியாளரின் சுயவிவரம்:

- அவரது அடுத்த பிறந்தநாளின் போது 39 வயது*
- 2% நிரந்தரத் திறனிழப்பு

**இந்தப் பணியாளர்கள் $1,760 முதல் $5,240 வரையிலான இழப்பீட்டைப் பெறுவதற்குத் தகுதி பெறுகிறார்.**

அவரது சராசரி மாதாந்தர ஊதியங்களின்படி (AME) இழப்பீட்டுத் தொகை எவ்வளவு வேறுபடும் என்பதைப் பின்வரும் அட்டவணை காண்பிக்கின்றது.

| உதாரணம் | வயது பெருக்கல் விகிதம் | %நிரந்தரத் திறனிழப்பு | சராசரி மாதாந்தர ஊதியம் | சராசரி மாதாந்தர ஊதியத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட இழப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 146 | 2% | $450 | %நிரந்தரத் திறனிழப்பு x வயது பெருக்கல் விகிதம் x சராசரி மாதாந்தர ஊதியம்<br>2% x 146 x $450 = $1,314 |
| 2 | | | $1,000 | %நிரந்தரத் திறனிழப்பு x வயது பெருக்கல் விகிதம் x சராசரி மாதாந்தர ஊதியம்<br>2% x 146 x $1,000 = $2,920 |
| 3 | | | $2,000 | %நிரந்தரத் திறனிழப்பு x வயது பெருக்கல் விகிதம் x சராசரி மாதாந்தர ஊதியம்<br>2% x 146 x $2,000 = $5,840 |

*வயது பெருக்கல் விகிதத்தின் அட்டவணைக்குப் பின்னிணைப்பு ஆ (பக்கம் 30)-ஐப் பார்க்கவும். இந்த உதாரணத்தில், அது 146 ஆகும்.



| இழப்பீடு வரம்புகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட இழப்பீட்டுத் தொகை | அசல் இழப்பீட்டுத் தொகை |
|---|---|
| %நிரந்தரத் திறனிழப்பு x குறைந்தபட்ச வரம்பு<br><br>2% x $88,000 = $1,760 | **$1,760**<br>(இழப்பீட்டு வரம்பின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட இழப்பீட்டைக் காட்டிலும் சராசரி மாதாந்தர ஊதியத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட இழப்பீடு குறைவாக உள்ளதால்) |
| %நிரந்தரத் திறனிழப்பு x குறைந்தபட்ச வரம்பு<br><br>2% x $88,000 = $1,760 | **$2,920**<br>(இழப்பீட்டு வரம்பின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட இழப்பீட்டைக் காட்டிலும் சராசரி மாதாந்தர ஊதியத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட இழப்பீடு உயர்வாக உள்ளதால்) |
| %நிரந்தரத் திறனிழப்பு x குறைந்தபட்ச வரம்பு<br><br>2% x $262,000 = $5,240 | **$5,240**<br>(இழப்பீட்டு வரம்பின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட இழப்பீட்டைக் காட்டிலும் சராசரி மாதாந்தர ஊதியத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட இழப்பீடு அதிகமாக உள்ளதால்) |

**பயனுள்ள உதவிக்குறிப்பு**

**பல்வேறு இழப்பீட்டுப் பலன்களைக் கணக்கிடுவதற்கான ஒரு இணையம்வழிக் கருவி (வேலையிடக் காய இழப்பீடுக்கான சுய-மதிப்பீட்டுக் கருவி) www.mom.gov.sg/calculate-wic -இல் கிடைக்கிறது**

## பின்னிணைப்பு D: சம்பவம் குறித்து முதலாளி தகவல் தெரிவிக்க வேண்டுமா

| உதாரணம் | சம்பவ அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டியது கட்டாயமா? |
|---|---|
| ஒரு பணியாளர் சாலை விபத்தைச் சந்தித்தார்: | |
| A. எந்த வாகனம் என்பதைப் பொருட்படுத்தாது, பணியின் போது மற்றும் பணி நோக்கத்திற்காகப் (உதாரணமாக, ஒரு கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகப் பணியிடத்திலிருந்து கூட்டம் நடைபெறும் இடத்திற்குப் பயணம் செய்வது) பயணம் செய்யும் போது ஏற்படும் விபத்துகள். | ✓* |
| B. வீட்டிற்கும் வேலையிடத்திற்கும் இடையே பயணம் செய்வதற்கு நிறுவனத்தின் போக்குவரத்து வாகனத்தில் செல்லும் போது. அந்த வாகனம் ஒரு பொதுப் போக்குவரத்து வாகனம் அல்ல. | ✓* |
| C. தனது சொந்த வாகனத்தில் (மிதிவண்டி உள்பட) / தனது நண்பரின் வாகனத்தில் / பொதுப் போக்குவரத்து வாகனத்தில் பணியின் போது அல்லது பணி முடிந்த பிறகு தனது தனிப்பட்ட வேலையை நிறைவேற்றச் செல்லும் போது. | ✗ |
| D. வேலைக்காகச் சொந்த / நிறுவனத்தின் வாகனத்தை ஓட்டிச் செல்லும் போது விபத்தைச் சந்தித்தார். அதில் பணியாளர் காயமடையவில்லை ஆனால் பொதுமக்களில் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். | ✗ |
| ஒரு மாணவர் பள்ளி வளாகத்திற்குள் கீழே விழுந்துவிட்டார், ஆனால் பள்ளி வளாகங்களுக்குள் நடைபெற்ற ஏதேனும் வேலைகளின் விளைவாக அல்ல. | ✗ |
| ஒரு ஆசிரியர் ஆய்வகப் பரிசோதனை ஒன்றை மேற்கொண்டிருந்தார். அப்போது ஒரு சோதனைக் குழாய் நொறுங்கி, ஆசிரியருக்கு வெட்டு ஏற்படுத்தியது. அவருக்கு 4 நாட்கள் வெளிநோயாளிக்கான மருத்துவ விடுப்பு வழங்கப்பட்டது. | ✓* |
| ஒரு சிங்கப்பூர் முதலாளியால் பணியமர்த்தப்பட்டுள்ள மற்றும் சிங்கப்பூரில் வசிக்கின்ற ஒரு பணியாளர் ஒரு வெளிநாட்டு ஒப்பந்தத்தில் இருக்கும் வேளையில் பணி தொடர்பான காயத்தினால் பாதிக்கப்பட்டார். | ✓* |
| மாலுமி ஒருவர் சிங்கப்பூர் பதிவுபெற்ற கப்பல் ஒன்றில் பயணம் செய்யும் வேளையில் பணிக் காயத்தினால் பாதிக்கப்பட்டார். அக்கப்பல் எந்த இடத்தில் இருக்கிறது என்பது ஒரு பொருட்டல்ல. | ✓* |
| ஒரு கட்டுமானப் பணியாளர் வழுக்கி கீழே விழுந்துவிடுகிறார். அதனால் அவருக்கு கால் முறிவு ஏற்படுகிறது. அவருக்குத் தொடக்கத்தில் 2 நாட்கள் மருத்துவ விடுப்பு வழங்கப்படுகிறது, ஆனால் அதைத்தொடர்ந்து அவருக்கு 2 வாரங்கள் மருத்துவ விடுப்பு வழங்கப்படுகிறது. | ✓ |

*மற்ற தகவல் தெரிவிக்கின்ற நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்ட நிலைமையின் அடிப்படையில் இது உள்ளது, அதாவது, பணியாளர் விபத்தில் காயமடைந்தார்:

- மரணமடைந்தால், அல்லது
- குறைந்தது 24 மணிநேரங்களுக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார், அல்லது
- 4 அல்லது அதற்கு மேற்பட்ட நாட்காட்டி தினங்களுக்கு மருத்துவ விடுப்பு (*தொடர்ச்சியாக அல்லது இடைவிட்டு*) அளிக்கப்பட்டது

## பின்னிணைப்பு E: குற்றங்கள் மற்றும் அபராதங்களின் பட்டியல்



| குற்றம் | அபராதம் |
|---|---|
| தகவல் தெரிவிக்க வேண்டிய விபத்தைக் குறிப்பிட்ட காலத்திற்குள் மனிதவள அமைச்சிடம் தகவல் தெரிவிக்கத் தவறுதல் | முதல் முறை செய்யும் குற்றத்திற்கு - $5,000 வரை அபராதம்;<br><br>இரண்டாவது அல்லது அதைத்தொடர்ந்த குற்றங்களுக்கு - $10,000 வரை அபராதம் மற்றும்/அல்லது 6 மாதங்கள் வரை சிறைத்தண்டனை |
| கட்டாயப் பணியாளர் குழுக்களுக்காகப் போதுமான வேலையிடக் காய இழப்பீட்டுக் காப்புறுதியைப் பராமரிக்கத் தவறுதல் | $10,000 வரை அபராதம் மற்றும்/அல்லது 12 மாதங்கள் வரை சிறைத்தண்டனை |
| இழப்பீட்டுத் தொகை வழங்கத் தவறுதல் | $10,000 வரை அபராதம் மற்றும்/அல்லது 12 மாதங்கள் வரை சிறைத்தண்டனை |
| தவறான தகவல்கள் அல்லது அறிக்கையை வழங்குதல்<br><br>ஆணையரை அல்லது ஆய்வாளரை அவரது அதிகாரங்களை அல்லது கடமைகளைச் செய்ய விடாமல் வேண்டுமென்றே தடுத்தல் அல்லது தாமதப்படுத்துதல் | $5,000 வரை அபராதம் மற்றும்/அல்லது 6 மாதங்கள் வரை சிறைத்தண்டனை |

# பின்னிணைப்பு F: வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் முதலாளியின் கடப்பாடுகளுக்கான சரிபார்ப்புப் பட்டியல்

| காப்புறுதி | ✔ |
|---|---|
| உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பணியாளர்கள் இருவருக்கும் வேலையிடக் காய இழப்பீட்டுக் (WIC) காப்புறுதியைப் பராமரிக்கவும். | |
| காப்புறுதி பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டிய பணியாளர்களைக் காப்புறுதி ஆவணம் பிரதிபலிப்பதை உறுதிசெய்யவும். | |
| பணித் தொடர்பான விலக்களிப்பு உட்பிரிவுகள் மற்றும் நலமடைதல் உட்பிரிவுகளைச் சரிபார்க்கவும். | |
| ஏதேனும் சந்தேகமிருந்தால், காப்புறுதி ஆவணங்களில் உள்ள ஏதேனும் விவரங்களை விளக்குமாறு உங்கள் காப்பீட்டாளர்களை அணுகவும். | |
| **விபத்து குறித்துத் தகவல் தெரிவிக்கவும்** | |
| சம்பவம் நடைபெற்ற நாளில் இருந்து அல்லது மருத்துவ விடுப்பின் 4 வது நாளில் இருந்து 10 நாட்களுக்குள் மனிதவள அமைச்சிடம் சம்பவ அறிக்கையைச் சமர்ப்பிக்கவும். | |
| விபத்து குறித்து உங்கள் காப்பீட்டாளருக்குத் தகவல் தெரிவியுங்கள். | |
| **இழப்பீடு** | |
| அசல் மருத்துவச் சான்றிதழ்களின் இரசீதைப் பெற்றதில் இருந்து அடுத்த 14 நாட்களுக்குள் தொகை செலுத்துவதற்கு, பணியாளரின் அடுத்த ஊதியத் தேதிக்குள் மருத்துவ விடுப்பு ஊதியங்களை அளிக்கவும். | |
| மருத்துவக் கட்டணங்கள்/செலவினங்களை முறையாக வழங்கவும், இதன்மூலம் மருத்துவச் சிகிச்சைகள் தாமதமாகாது. | |
| **தகவல்தொடர்பு** | |
| உங்கள் பணியாளருக்குப் வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தின் கீழுள்ள உரிமைகள் குறித்து விளக்குங்கள். அவர்களுக்கு குறித்த நேரத்தில் தகவல்களை வழங்கவில்லை என்றால், அவர்கள் வழக்கறிஞரிடம் செல்லக்கூடும். | |
| உங்கள் பணியாளர் தனது காயத்திலிருந்து குணமடைந்து வரும் வேளையில் அவர் மீது அன்பும் அக்கறையும் காட்டுங்கள். | |
| **காய மேலாண்மை** | |
| எல்லா மருத்துவச் சந்திப்புத் திட்டங்களிலும் உங்கள் பணியாளர் கலந்துகொள்வதை உறுதிசெய்யுங்கள் | |
| உங்களின் காயமடைந்த பணியாளர் பணியில் குணமடைவதற்கு அல்லது பணிக்குத் திரும்புவதற்கு உதவ, அவருக்குப் பொருத்தமான வேலைகளை அளியுங்கள். | |
| வேலை அனுமதிச்சீட்டு நிபந்தனைகளின் கீழ், உங்கள் பணியாளர் ஒரு வேலை அனுமதிச்சீட்டை வைத்திருப்பவர் எனில், அவரைப் பேணிப் பராமரிப்பதற்கு ஆகும் செலவை நீங்கள் தான் ஏற்க வேண்டும். அதில், மருத்துவச் சிகிச்சை மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்க குடியிருப்பு வசதி ஆகியவை உள்ளடங்கும். | |
| உங்களின் வெளிநாட்டுப் பணியாளர் சிங்கப்பூரில் தங்கியிருப்பது மனிதவள அமைச்சுக்குத் தேவைப்படுகிறது எனில், நீங்கள் அவரைத் தாய்நாட்டிற்கு அனுப்பிடக் கூடாது | |
| **சம்பவ முடிவு** | |
| மனிதவள அமைச்சு மதிப்பீட்டு அறிக்கையை வழங்கிய பிறகு, அறிக்கை வழங்கப்பட்ட 21 நாட்களுக்குள் காயமடைந்த பணியாளருக்கு இழப்பீடு வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்யவும் | |
| ஏதேனும் ஆட்சேபணைகள் இருந்தால், தயவுசெய்து எல்லாச் சந்திப்புக் கூட்டங்களிலும் கலந்துகொள்ளுங்கள். இதன்மூலம் சர்ச்சையைத் தீர்த்துக்கொள்ளலாம். | |

மேலும் தகவல்களுக்கு, எங்கள் இணையத்தளத்தைப் பாருங்கள்

**www.mom.gov.sg**

பிப்ரவரி 2017-இல் புதுப்பிக்கப்பட்டது

இந்த வழிகாட்டியில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள், அச்சிடப்படும் நேரத்தில் சரியானவையாகும். இந்த வழிகாட்டி, முதலாளிகளுக்கு வேலையிடக் காய இழப்பீடு (WIC) குறித்த அடிப்படைத் தகவல்களை வழங்குகின்றது. மேலும் இது வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு உள்ள உரிமைகள் மற்றும் கடப்பாடுகளின் ஒரு எளிமையான கண்ணோட்டத்தையும் வழங்குகிறது. ஒரு வழிகாட்டியாக, இந்தத் தகவல் சிற்றேடு எந்தச் சட்ட நிலைப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை. சந்தேகமிருந்தால், வேலையிடக் காய இழப்பீட்டுச் சட்ட விதிகளைப் படித்து அறிந்துகொள்ள வேண்டும்.